1982 ஏப்ரல் 5] [பேரவைத் தலைவர்]

தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 45/1980) (ஆய்வுக் குழு திருத்தி அமைத்தவாறு) அடுத்த கூட்டத் தொடரில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறும். அடுத்த கூட்டம் ஜூலைத் திங்களில் நடைபெறும். நாள் பின்னர் அறிவிக்கப்படும். பேரவையின் இந்தக் கூட்டம் 7-4-1982 அன்று முடிவடையும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை, 7-4-1982-ந் தேதி காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.00 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

(9) பேரவை முன்வைக்கப் பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

162. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு சாராய (தயாரித்தல்) விதிகளில்-சில திருத்தங்கள் செய்வது குறித்து 20-7-1981-ஆம் தேதியிடப்பெற்ற மதுவிலக்கு-ஆயத் தீர்வைத் துறையின் 126-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1937ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.)

163. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு சாராய (சில்லரை விற்பனைக் கடைகள்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 10-12-1981-ஆம் தேதியிடப்பெற்ற மதுவிலக்கு-ஆயத் தீர்வைத் துறையின் 349-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1937 ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.

164. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு (சில்லரை விற்பனைக் கடைகள்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 15.12.1981-ஆம் தேதியிடப்பெற்ற மதுவிலக்கு-ஆயத் தீர்வைத் துறையின் 361-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது).

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1982 ஏப்ரல் 5

165. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு சாராயம்-கள் (தனியார் அனுமதிச்சீட்டு) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 15-2-1981-ஆம் தேதியிடப்பெற்ற மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறையின் 362-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 10/1937) 54 (3) பிரிவின் கீழ்பேரவைமுன் வைக்கப் பெற்றது).

166. தமிழ்நாடு 1940—ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 18-1-1982ஆம் தேதியிடப்பெற்ற உள்துறையின் 97-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (1932—ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 4/1939) 133 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

167. தமிழ்நாடு 1972 ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியப் பணியாளரமைப்பு விதிகளில் சிலதிருத்தங்கள் செய்வது குறித்து 13-3-1981 ஆம் தேதியிடப்பெற்ற வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 179-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு. (தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல், நீக்குதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.

168. தமிழ்நாடு 1972-ஆம் ஆண்டு குடிசை மாற்று வாரியப் பணியாளரமைப்பு விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து 12-5-1981-ஆம் தேதியிடப் பெற்ற வீட்டுவசதி-நகர்ப்புற வளர்ச்சித் து றயின் 329-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1971-ஆம் ஆண்டு குடிசைப் பகுதிகள் (மேம்படுத்துதல், நீக்குதல்) சட்டகதின் (தமிழ்நாடு சட்டம் 11/1971) 72 (2) உட்பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

அ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

—எதுவுமில்லை—